بسم الله الرحمن الرحيم

إن الدين عند الله الإسلام    لا إله إلا الله محمد رسول الله

**Munir Wasu'l Office**
**JAMAAT UL SAHIH AL ISLAM**

# *An Advice and Warning to Benjamin Netanyahu, the Prime Minister of Israel by the Khalifathullah Hazrat Munir Ahmad Azim (atba), Worldwide Spiritual Leader of Jamaat Ul Sahih Al Islam.*

## ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் அகில உலகத் தலைவர் ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம்(அ) அவர்கள் இஸ்ரவேல் நாட்டு பிரதமர் பெஞ்சமீன் நெதன்னியாஹுவுக்கு விடுத்துள்ள அறிவுரையும் எச்சரிக்கையும்.

தூய்மையான இந்த ரமலான் மாதத்தில், உலகனைத்திலுமுள்ள முஸ்லீம்கள் விரத நோற்பில் இருக்கும் இத்தினங்களில், பாலஸ்தீனத்தை சார்ந்த நமது சகோதர சகோதரிகளும் குழந்தைகளும் நோன்பு நோற்பில் இருக்கும் இந்த நாள்களில், அகிலவும் படைத்திருப்பவனின் அனைத்துக் கட்டளைகளையும் நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கின்ற இந்த தூய மாதத்தில், இந்த புனித மாதத்தையும் முஸ்லீம்களின் நம்பிக்கையையும் தாங்கள் மிக மோசமாக காண்பதை ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் அகிலவுலக ஆன்மீக தலைவர் என்ற நிலையில் அது என்னை மிக வருத்தத்திற்கு ஆளாக்கியுள்ளது.

வடக்கு ஹாஸா முனம்பில் ஏராளமான மக்களின் மீது இஸ்ரவேல் மேற்கொண்ட தாக்குதலை இதயமற்ற செயலன்றி அதைக் காணயியலாது. ஊனமுற்ற விடுதியின் பால் உள்ள இந்த தாக்குதல் காரணமாக இரண்டு ஊனமுற்ற பெண்கள் கொலை செய்யப்படவும், நான்கு நபர்கள் காயமடையவும் செய்தார்கள். ஒரு தரப்பட்ட எச்சரிக்கையுமின்றியே நீங்கள் ரோக்கட் ஆக்கிரமணம் மேற்கொண்டது. மேலும் கிழக்கு ஹாஸா நகரமான துபாமாவட்டத்திலும் இஸ்ரவேல் படை ஆக்கிரமணம் நடத்தியுள்ளது. அங்கு ஒரு வீடும் பள்ளியும் மண்ணோடு மண்ணாகிவிட்டது மட்டுமல்லாமல் இருபது பேர்கள் மரணமடையவும் செய்தார்கள். சாயங்காலை, ஹாஸாவின் மேற்கு பகுதியினை சார்ந்த ரஃபாவில் நீங்கள் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக மூன்று நபர்கள் உயிரிழந்தன. ஞாயிறு விடியற்காலை ஜபாலீயாவின் ஒரு வீட்டினை லட்சியம் வைத்து

கொண்டு நடத்திய ஆக்கிரமிப்பின் காரணமாக பதினான்கு வயதான ஒரு பாலஸ்தீன சிறுவனும் மரணமடைந்தான். ஹாஸா நகரத்தில் ஷிபா மருத்துவமனையிலும் ராக்கட் ஆக்கிரமித்ததின் பலனாக இறந்த ஐந்து பாலஸ்தீன நபர்களின் உடல்களும் காணப்பட்டது.

இஸ்ரவேல் ராணுவப்படை ஹாஸாவில் 60 இடங்களில் ஆக்கிரமம் மேற்கொண்டார்கள். அதில் 14 பாலஸ்தீன நபர்கள் அன்று இரவில் மட்டும் கொலை செய்யப்பட்டார்கள். இஸ்ரவேல் தொடர்ந்தும் நீண்டகாலம் போர் செய்துக் கொள்வதற்கு ஆயத்தமாய் கொள்கின்றதோ? முஸ்லீம்களின் இரத்தம் சிந்திக் காண்பதற்குதான் தீர்மானித்து கொண்டதோ? 2014 ஜூலை 8 செவ்வாய்கிழமை வரை 124 பாலஸ்தீனிகள் கொலை செய்யப்பட்டு இருக்கின்றார்கள். தெருதெருவாக வெடிகுண்டு வீசியதன் காரணமாகவேயிது நிகழ்ந்தது. ஹாஸாவின் மருத்துவமனை அறிக்கையின் கணக்காகும் இது. 900 பாலஸ்தீனியர்களுக்கு காயமேற்பட்டது. அவர்களின் சிலர்களின் கைகால்கள் இழக்கவும் மற்று சிலர்களின் வாழ்க்கையே குலைந்து போகவும் செய்துள்ளது. காயமடைந்தவர்களில் பெருபான்மையும் சிறுவர்கள் ஆவார்கள். அவர்களனைத்தும் அவசர சிகிட்சை மையத்திலாகும்.

இரக்கமில்லாத நிலையில் ஹாசாவில் தெரு தெருவாக நடத்திய வெடிகுண்டு வீச்சின் வீடியோக்கள் விதரணம் செய்யப்பட்டுள்ளது. வீடுகளில் மேல் முதலாவதாக மோர்ட்டாருகள் போடவும், அதைத்தொடர்ந்து சக்திவாய்ந்த குண்டுகள் வீசி வீடுகளை தகர்த்துக்கொள்ளவும் செய்யப்பட்டுள்ளது. பாலஸ்தீன சகோதரர்களின் சத்தத்தில் பயவும் ஏக்கவும் முழங்குகின்றது. நிமிடங்களுக்குள் கட்டிடங்கள் மண்ணோடு மண்ணாகிவிடுகின்றன. நான் கேட்கின்றேன் அரசியல் பீகரத்துவத்திற்கும், ராஜபீகரத்துவத்திற்கும் ஒன்றுக்கொன்று என்ன வேறுபாடு? அதன் அளவிலும் அதன் பருமனிலும் மட்டும் தானே முரண்பாடு. இந்த நிலையில் நிரபராதிகளை கொலைசெய்ய நீங்களே இறைவன் என்று எண்ணுகின்றீர்களோ? பூமியில் ஏராளமான பொய் தெய்வங்களை நான் பார்த்ததுண்டு. அவர்கள் பூமியில் இறைவர்கள் என்று எண்ணி செயல்பட்டு வந்த வேளைகளில், அனைத்தையும் வெல்லுகின்ற இறைவன் அவர்களை அழித்துக் கொண்டதையும் நான் பார்த்திருக்கின்றேன்.

இப்பகையினை முடித்துக்கொள்ளுவதற்கு இஸ்ரவேலர்களிடவும், ஹமாஸிடவும் உலகம் மன்றாடிக்கேட்கின்றது. இரண்டு நாட்கள் முன்வரையில் மரணடைந்தவர்களின் எண்ணிக்கை 162 ஆக உயர்ந்திருக்கின்றது. செவ்வாய் கிழமை இப்பிரச்சனை உருவானது முதல் இரண்டு வயதுள்ள குழந்தை உட்பட பாலஸ்தீனை சாந்த 56 ஆண்களும் 73

பெண்களும் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். ஹாஸா எல்கையில் அனைத்தும் நீங்களும் உங்கள் படைகளும் அதிகமான மக்களின் இரத்தம் சிந்திக்காண விரும்புகின்றீர்கள். வடக்கு ஹாஸாவில் இருந்து பாலஸ்தீன் மக்கள் அவர்களின் மனைகளை விட்டுவிட்டு செல்வதற்கு நீங்கள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றீர்கள். உலகிற்கு முன் நீங்கள் எடுத்திருப்பது இஸ்ரவேல் பிரதமர் என்ற நிலையில் மிக ஆணவமான தீர்மானமாகும். அதாவது எங்களுடைய அழிவிற்காக செயல்படுகின்ற தீவிர அமைப்புகளுக்கு எதிராக அனைத்து சக்திகளும் பயன்படுத்தி ஆக்கிரமித்துக்கொள்வதில் இருந்து எங்களை ஒரு உலக அளவிலான சக்திக்கும் தடையமுடியாது.

உங்களின் நாட்டில் இந்த தூய மதத்தில் முஸ்லீம் சகோதரர்களை ஆக்கிரமித்துக்கொள்ள, உங்களின் நாட்டை சார்ந்தவர்களையும், பட்டாளகாரர்களையும் நீங்கள் அனுமதிப்பீர்களா? முஸ்லீம்களை தீவிரவாதிகள் என்று கூறவேண்டிய ஆணவம் உங்களுக்கு உண்டு. ஆனால், பாலஸ்தீன்மக்களின் மீது இந்த தீவிரதாக்குதலை மேற்கொண்டு வருகின்றீர்கள். உங்களுக்கு இஸ்லாமிடவும், முஸ்லீமிடவும் மிக கடினமான வெறுப்பு என்று இதில் இருந்தும் புரிந்துக்கொள்ளலாம். உங்களின் ரத்தத்தில் சிறுதளவு கூட மனிதாபிமானம் இல்லையா?

உங்களுக்கு தெரியாதுயென்றால் நான் உங்களுக்கு கற்பிக்க விரும்புகின்றேன். அதாவது இஸ்லாமின் தூய தூதர் முஹமது (ஸல்) அவர்கள் பொதுவாகவும், முஸ்லீம்களை குறிப்பாகவும் கற்பித்திருப்பது **"இஸ்லாமில் சகிப்புத்தன்மை என்பது ஒரு நன்மை"** என்று. திருகுர் ஆன் என்ற முழுமைப் பெற்ற வேதம் இவ்வாறு கூட நம்மை கற்பிக்கின்றது. அதாவது **"ஏனைய நம்பிக்கைகளையும் நம்பிக்கையாளர்களையும் நாம் ஆதரித்திட வேண்டும்"** என்று.

மக்கள் உள்ளங்களில் பகைமை விளைவிக்கவும், வேதனைகள் ஏற்படுத்தவும் நிரபராதிகளான பாலஸ்தீன் மக்களை கொலை செய்யவும் செய்கின்றீர்களேயானால், உங்களுக்கும், உங்களுடைய மக்களுக்கும் நான் வழங்குகின்ற அறிவுரை இவ்வாறாகும். கடந்த காலங்களில் செய்தது போன்று பாலஸ்தீன் மக்களை இனி ஆக்கிரமித்துக் கொள்வதற்கு முன் நூறு முறை யோசிக்க வேண்டும். கடினமான ஆக்கிரமங்கள் மேற்கொள்வதற்கு முன் நூறு முறையல்ல பல லட்சம் முறை நீங்கள் யோசிக்க வேண்டும். இறை தண்டனை உங்களின் முன்காமியான **"ஏரியல் ஷாரோனை"** பிடித்தது போன்று உங்களையும் பிடிக்கப்படாமல் இருக்க. சுயநிலையிழந்த **"ஏரியல் ஷாரோனின்"** இழிவான முடிவுக்கு உலகம் சாட்சியானதாகும். நான் அன்னாருக்கும் எச்சரிக்கை விடுவித்திருந்தேன். பிரார்த்தனை செய்யவும் செய்திருந்தேன். பாலஸ்தீன் மக்களிடம் எல்லாம் வல்ல இறைவன்

நீதிகாட்டிக்கொண்டான். காரணம் இஸ்ரவேல்களின் கரங்களால் வருடங்களாக பலதரமான துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்ட மக்கள் ஆவார்கள் அவர்கள்.

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் அகிலவுலக ஆன்மீக தலைவர் என்ற நிலையில் நான் இப்போது உங்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றேன். இஸ்ரவேல் பிரதமர் என்ற நிலையில் நீங்களும், பாலஸ்தீனை சார்ந்த நிரபராதிகளான மக்களை கொலை செய்தவர்களுக்காகவும் நீங்கள் உண்மையான இறைவன் பக்கம் திரும்பிக்கொண்டு பாவமன்னிப்பை தேடுங்கள். பாலஸ்தீன் மக்களிடவும் உலக முஸ்லீம்களிடவும் மன்னிப்புக் கேளுங்கள். அதுவழியாக இரண்டு வகை மக்களிடத்திலும் உள்ள வெறுப்பினையும் பகையினையும் இல்லாய்மை செய்ய முடிந்துவிடும். நீங்கள் கண்டிப்பாக பாவமன்னிப்பைத் தேடுங்கள். பாவமன்னிப்பினை தேடிக்கொள்ளமாட்டீர்கள் என்றால், சர்வ வல்லவனாகிய இறைவனில் இருந்து மிககடினமான தண்டனை, இறைதண்டனை, இறைவனிடமிருந்து வருவதை எதிர்பார்த்து கொள்ளுங்கள்.

இந்த நூற்றாண்டின் இறைதூதன் என்ற நிலையில் நான் இந்த எச்சரிக்கையினை உங்களுக்கு விடுக்கிறேன். நீங்கள் இந்த எச்சரிக்கையை கௌரவத்துடன் கண்டுகொள்வீர்கள் என்று நான் எண்ணுகின்றேன். நீங்கள் மிக தாமதமாகிவிட்டீர்கள். இரத்தம் சிந்த வைக்கும் இந்த செயல்பாடுகளுக்கு முடிவுகட்டுங்கள். இல்லையென்றால், இறை கரங்கள் உங்களை அழித்துவிடும்.

நேர்மையான வழியினை பின்பற்றுகின்றோர்களுக்கு சமாதானம் ஆமீன்.

(sd)
**MUNIR AHMAD AZIM**
**World Wide Spiritual Leader**
**Jamaat Ul Sahih Al Islam**
*14 July 2014*

முனீர் அஹ்மது அஸீம்
அகில உலக ஆன்மீக தலைவர்
ஜமாஅத்துச்சஹீஹில் இஸ்லாம்.
14 ஜூலை 2014

**********

Translated by
**Azim Ahmad**
Sadr Sahibul Faraj
Kerala/ Tamil Nadu
E-mail: sahihazisulsat@gmail.com
Cell: 09789180817